செ.வெ.எண்:176 நாள்:16.03.2018

திருநெல்வேலி மாவட்டத்தில் 10 ம் வகுப்பு பொதுத்தேர்வு நடைபெறும் பள்ளி மற்றும் மத்திய சிறைச்சாலை மையங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு.

-----

திருநெல்வேலி மாவட்டத்தில் 10 ம் வகுப்பு பொதுத்தேர்வு நடைபெறும் பள்ளி மற்றும் மத்திய சிறைச்சாலை மையங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (16.03.2018) நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

திருநெல்வேலி, பாளையங்கோட்டை சாராள் தக்கர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:

திருநெல்வேலி வருவாய் மாவட்டத்தில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு மார்ச் / ஏப்ரல் 2018 16.03.2018 முதல் 20.04.2018 முடிய நடைபெற உள்ளது. மார்ச் / ஏப்ரல் 2018 இடைநிலைப் பொதுத் தேர்வு சேரன்மகாதேவி, தென்காசி, திருநெல்வேலி கல்வி மாவட்டங்களில் மொத்தம் 164 தேர்வு மையங்களில் நடைபெற உள்ளன. 482 பள்ளிகளை சேர்ந்த **21832** மாணவர்களும், **22151** மாணவிகளும் மொத்தம் **43983** மாணவ / மாணவியர்கள் இடைநிலைப் பொதுத் தேர்வை எழுதிகின்றனர். இவர்களில் 108 மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர்கள் அடங்குவர். 37 மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு ஆசிரியர்கள் சொல்வதை எழுதுபவராக (Scribe) நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மாற்றுத் திறனாளி மாணவ/மாணவியர்களில் 31 கண்பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர்.

தேர்வு மையங்களில் 164 முதன்மைக் கண்காணிப்பாளர்கள், 20 கூடுதல் முதன்மை கண்காணிப்பாளர்கள், 164 துறை அலுவலர்கள், 2632 அறை கண்காணிப்பாளர்கள், 8 பறக்கும் படை குழுவினர்கள், 248 நிலையான படை உறுப்பினர்கள் மற்றும் 32 வழித்தட அலுவலர்கள் தேர்வுப் பணியில் ஈடுபடுகின்றனர். பாளையங்கோட்டை மத்திய சிறை தேர்வு மையத்தில் 39 சிறை கைதிகள் தேர்வு எழுதிகின்றனர்.

தேர்வு மையங்களுக்கு வரும் மாணவ, மாணவிகளுக்கு போக்குவரத்து வசதி மற்றும் பள்ளிகளில் தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளது. தேர்வு மையங்களில் தேர்வு நேரங்களில் போது தடையில்லா மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேர்வுகள் நேர்மையான முறையில் நடைபெறுவதைக் கண்காணிக்க திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் தலைமையில் இணை இயக்குநர், முதன்மைக் கல்வி அலுவலர், வருவாய் கோட்ட அலுவலர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் மற்றும் மெட்ரிக் பள்ளி ஆய்வாளர் தலைமையில் பறக்கும் படை உறுப்பினர்கள் ஆய்வு செய்கிறார்கள். என தெரிவித்தார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பாளையங்கோட்டை மதிதிய சிறைச்சாலையில் கைதிகள் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுத அமைக்கப்பட்டுள்ள தேர்வு மையத்தினை பார்வையிட்டார்கள். இன்றைய தேர்வு எழுத 29 கைதிகள் விண்ணப்பித்திருந்த நிலையில் 24 கைதிகள் தேர்வு எழுதினர்.

இந்நிகழ்ச்சியில் முதன்மை கல்வி அலுவலர் திருமதி.முருகானந்தம், மத்திய சிறைச்சாலை கண்காணிப்பாளர் திரு.செந்தாமரைகண்ணன், நாட்டு நலப்பணி திட்ட மாவட்ட தொடர்பு அலுவலர் திரு.தேவபிச்சை, பாளை வட்டாட்சியர் திரு.கந்தசாமி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.